1995 ஏப்ரல் 5]

(அ) சென்னையிலிருந்து வடக்கு நேக்கிச் செல்லும் பேருந்துகளும், தெற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளும் தாம்பரம், பூந்தமல்லி, ரெட்ஹில்ஸ் ஆகிய மூன்று இடங்களில் பேருந்து நிலையம் அமைத்து, அங்கிருந்து புறப்பட்டுச் செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சென்னையிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளும், தெற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளும் தாம்பரம், பூந்தமல்லி, ரெட்ஹில்ஸ் ஆகிய மூன்று இடங்களில் பேருந்து நிலையம் அமைத்து அங்கிருந்து புறப்பட்டுச் செல்வது குறித்து தற்போது திட்டம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:**—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடிப் பகுதியில் திருமதி மேரி சின்னராணி என்ற பெண் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடிக்கு அருகில், சமீபத்தில் ஆசிரியை மேரி சின்னராணி என்பவர் காரில் கடத்தப்பட்டு கொலை செய்யப்பெற்றதாக உள்ள பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று ஓர் பிரச்சினைக்கு என்னிடம் அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. என் அனுமதியைக் கோரியுள்ள உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி, திரு. செ.கு. தமிழரசன்,

திரு. ஆர். சிங்காரம், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் ஆவர். இதுபற்றிச் சுருக்கமாகப் பேரவையில் தங்கள் கருத்தைக் கூறக் கேட்டுக்கொள்கிறேன். திரு. பழனிசாமி, என்ன பிரச்சினை என்று மட்டும்தான் சொல்ல வேண்டும்.

முற்பகல் 11-10

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியைச் சேர்ந்த பால்ராஜ் என்பவருடைய மகள் மேரி சின்னராணி என்கிற பெண், காலாடி ஊராட்சி ஒன்றியம் பூப்பாண்டியபுரம் தொடக்கப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு ஆசிரியையாகப் பணியாற்றி வந்திருக்கிறார்கள். கடந்த மாதம் 10ஆம் தேதி, அவர் தன்னுடைய பணியை முடித்து விட்டு, வீடு திரும்ப பேருந்துக்காகக் காத்திருந்த நேரத்தில், சில நபர்கள் வந்து அவரைக் கடத்தி, கற்பழித்து, கொலை செய்து புதைத்திருக்கிறார்கள். அன்றைய தினமே, அவருடைய தந்தையாரும், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. அப்பாதுரை அவர்களும் காவல் துறை அதிகாரி திரு. தசரதன் என்ற எஸ்.ஐ. இடத்தில் போய், தன்னுடைய மகளைக் காணோம், பள்ளிக்குப் போனவள் திரும்பி வரவில்லை, யாரோ காரிலே கடத்திப் போனதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். இப்படி முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினரும் அவருடைய தந்தையாரும் கூறியபோது, பெயர்களைக் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு மெக்கானிக் ஷெட்டில் வேலை பார்க்கக்கூடியவர்கள் அந்தக் காரிலே வந்ததாகச் சொல்கிறார்கள். அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திய போது, எனக்கு மிகவும் அவர் தெரிந்தவர், இப்படிப்பட்ட சம்பவங்களிலே அவர் ஈடுபடமாட்டார் என்று அந்த எஸ்.ஐ. சொல்லி, மறுத்திருக்கிறார். ஆனால் அந்தப் பெண் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு, இன்றைக்குக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எஸ்.ஐ. இடத்திலே அந்தப் பெண்ணின் கணவர் புகார் செய்கிறபோது--, அந்த ஆசிரியையுடைய கணவர் வெளி நாட்டில் வேலை செய்துகொண்டிருக்கிற காரணத்தால், அவர் நேற்றுதான் தொலைபேசி மூலமாகப் பேசியிருக்கிறார். அப்போதும் 'யாரும் அவரைக் கொலை செய்யவில்லை, தேவையில்லாமல் பதட்ட நிலையை உருவாக்க வேண்டாம்' என்று சொல்லி, மீண்டும் எஸ்.ஐ. மறுத்திருக்கிறார். காலத்தோடு காவல் துறை, எஸ்.ஐ. தசரதன் போன்றவர்கள் உரிய

நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த ஆசிரியை கற்பழிக்கப்பட்டதையும், கொலை செய்யப்பட்டதையும் தடுத்து இருக்க முடியும். இதற்குப் பின்னாலும்கூட, தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதிலே அவர் தாமதம் காட்டியிருக்கிறார். அப்படி தாமதம் காட்டியதன் விளைவாக இன்றைக்கு ஓர் உயிர் பலியாகி இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இவர் ஒரு ஆதிதிராவிடப் பெண். அந்தப் பெண் கலப்புத் திருமணம் செய்துகொண்டு, ஒரு முஸ்லீம் தெருவில் வசித்துக் கொண்டிருக்கிறார். ஆகையால் முதலமைச்சர் அவர்கள் உரிய விசாரணை நடத்தி, உரியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி நகரத்திலே ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மேரி சின்னராணி என்கிற பள்ளிக்கூட ஆசிரியை கற்பழிக்கப்பட்டு, புதைக்கப்பட்டிருக்கிறார். அவருடைய கணவர் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர். அவர் உடையார் சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் அரபு நாடுகளிலே பணியிலே இருந்ததால், அங்கே அவருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர் இங்கே வந்து, சில புகார்களைக் கொடுத்த பின்னாலே, 20 நாட்களுக்குப் பின்னாலே, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலே கவனமாக நாம் ஆராய வேண்டியது ஒன்று. கடத்தப்பட்ட கார் இருக்கிறதே, அது அந்த நகரத் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளருடைய கார் என்று சொல்லுகிறார்கள். எனவே ஒரு ஆதிதிராவிடப் பெண்மணி, அதுவும் பள்ளிக்கூட ஆசிரியை, கலப்புத் திருமணம் செயது கொண்டவர், தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறவர், கணவனை வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்பிவிட்டு வாழ்ந்து கொண்டிருக்கிற அந்தப் பெண்மணியினுடைய குடும்பத்திற்கு நீதி கிடைக்கின்ற வகையிலே ஒரு நீதி விசாரணையை நடத்தவும் அவர்களுக்கு ஏதாவது உதவித் தொகை வழங்கிடவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு இதை நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-15

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியைச்

சேர்ந்த திரு. சாமுவேல் பால்ராஜ் என்பவரின் மனைவி திருமதி பூர்ணம், 19-3-1995 அன்று சவேரியார் சமுத்திரத்தில் வசிக்கும் தனது மகள் மேரி சின்னராணியை, 10-3-1995-லிருந்து காணவில்லை என்று சாயல்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். திரு. மைக்கேல் என்பவரின் மனைவியான தனது மகள் மேரி சின்னராணி, பூப்பாண்டியபுரத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றி வருவதாகவும், அவர் காணாமல் போன தினத்திலிருந்து தனது உறவினர் வீட்டுக்குச் சென்றிருக்கிறாரா என்பது குறித்து விசாரித்து வந்ததாகவும், இறுதியில் எந்த விபரமும் கிடைக்காததால் இந்தப் புகாரைக் காவல் நிலையத்தில் தாக்கல் செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் டாக்சி டிரைவர் விஜயராஜு, என்பவரும், மெக்கானிக் ராமு என்பவரும் தனது மகளைக் கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள் என்றும் புகாரில் கூறியிருக்கிறார். அந்தப் புகாரின் மீது சாயல்குடி காவல் நிலையக் குற்ற எண் 211/95ல் இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 366-ன் கீழ் வழக்கு ஒன்றைப் பதிவு செய்து, காவல்துறையினர் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சாயல்குடியைச் சேர்ந்த சக்திவேல் யாதவ் என்பவர் மகன் விஜயராஜு என்பவர் பூப்பாண்டியபுரம் பேருந்து நிலையத்திலிருந்து திருமதி மேரி சின்னராணியை வாடகைக் கார் ஒன்றில் ஏற்றிக்கொண்டு முகையூருக்கு அழைத்துச் சென்றதாக விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. அந்தக் காரின் டிரைவர் தங்கமாரியும், கிளீனர் உமையாரும் உடன் இருந்ததாகத் தெரிகிறது. முகையூர் சாலையில் உள்ள மயிலாலயம்மன் கோவில் அருகே சேகரபாண்டியன் மற்றும் சிவா ஆகிய இருவரும் இவர்களோடு அந்தக் காரில் வந்து ஏறிக்கொண்டு பயணம் செய்ததாகத் தெரிகிறது. இந்த ஐந்து நபர்களால் திருமதி மேரி சின்னராணி கற்பழிக்கப்பட்டதால், அவர் மயக்கம் அடைந்ததாகவும், அவரை மயக்க நிலையிலிருந்து மீட்க முற்பட்டபோது, அவர் இறந்து விட்டார் என்பது அவர்களுக்குத் தெரியவந்ததாகவும் கூறப்படுகிறது.

திருமதி மேரி சின்னராணியின் நகைகளை அவர்கள் எடுத்துக்கொண்டு பூப்பாண்டியபுரம் இடுகாட்டிற்கு அவருடைய உடலை எடுத்துச் சென்று புதைத்ததாகவும் தெரிகிறது.

ஆக, இந்தக் குற்றத்தை விஜயராஜு, தங்கமாரி, சேகரபாண்டியன், சிவா மற்றும் உமையார் ஆகிய 5 பேரும் கூட்டாகச் சேர்ந்து செய்துள்ளனர் என்பது தெரியவருகிறது. காவல் துறையினர் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு விஜயராஜுவைக் கைது செய்துள்ளனர். அவர் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். விஜயராஜு கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில், திருமதி மேரி சின்னராணி புதைக்கப்பட்ட இடம் அடையாளம் காட்டப்பட்டு, பிரேதம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இறந்தவர் அணிந்திருந்த காதணியும் அந்த இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

4-4-1995 அன்று குற்றம் சாட்டப்பட்ட மற்ற நான்கு பேரையும் காவல்துறையினர் கைது செய்து, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்துள்ளனர். இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொள்ள தனிக் காவல் படை (Special Police Team) ஒன்று ஏற்படுத்தப்பட்டு, விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டதால்தான், குற்றம் செய்தவர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இந்த வழக்கில், இந்தியத் தண்டனைச் சட்டம் 376, 302 மற்றும் 202 ஆகிய பிரிவுகளும் தற்போது கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

விசாரணையின்போது, திருமதி மேரி சின்னராணிக்கும், முதல் குற்றவாளியான டிரைவர் விஜயராஜுக்கும் கள்ளத் தொடர்பு இருந்து வந்ததாகத் தெரிய வருகிறது. எனவே, தன்னிச்சையாக, சுய விருப்பத்தின் பேரில் விஜயராஜும், திருமதி மேரி சின்னராணியும் காரில் பயணம் செய்ததாகத் தெரிகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இங்கே தெரிவித்த தகவல்கள் தவறானவை, உண்மைக்குப் புறம்பானவை. திருமதி மேரி சின்னராணி காணாமல் போனது 10-ஆம் தேதி. ஆனால் காவல் நிலையத்தில் அவரது தாயாரால் புகார் கொடுக்கப்பட்டது 19 ஆம் தேதி என்பதை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காவல் நிலையத்திற்கு வெளியே யாரோ ஒரு சப்-இன்ஸ்பெக்டரிடம் அவர்கள் புகார் கூறியதாகவும், அந்தப் புகாரைப் பற்றி அந்த சப்-இன்ஸ்பெக்டர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைப் பற்றியும் அரசுக்குத் தெரியாது. காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது 19-ஆம் தேதிதான். விரைந்து காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து, இந்தக் குற்றத்தில் சம்பந்தப்பட்ட ஐந்து பேரையும் கைது செய்திருக்கிறார்கள். மேலும் பட்டப்பகலில் இந்தப் பெண்மணி கடத்தப்படவில்லை. அவர் ஏற்கெனவே தெரிந்தவருடன்-

கள்ளத்தொடர்பு இருந்ததால் தன்னிச்சையாக அவருடன் சென்றிருக்கிறார் என்றுதான் தெரியவருகிறது. இருப்பினும், இதுகுறித்து காவல்துறையினர் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்து, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

முற்பகல் 11-20

3. காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் ராஜினாமா செய்திருப்பதாக பத்திரிகைகளில் வந்துள்ள தவறான செய்தி குறித்து-மாண்புமிகு பேரவைத் தலைவரின் அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஒரு சிறு விளக்கம். பத்திரிகைகளில் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் ராஜினாமா செய்து விட்டதாக செய்திகள் வெளியிட்டு இருக்கிறார்கள். பேரவையின் உறுப்பினர்கள் ராஜினாமா செய்வது என்பதற்கு சில பல விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன. அது பேரவைத் தலைவரிடத்தில் நேரடியாக கொடுக்கப்பட வேண்டும். அது அவர்களுடைய சுய விருப்பத்தின் பேரில், வேறு எத்தகைய வற்புறுத்தலும் இல்லாத வகையில் அமைய வேண்டும். அப்படிக் கொடுக்கப்படுவதுதான் உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில் ராஜினாமாக் கடிதங்கள் ஆகும். பேரவைத் தலைவரிடத்தில் கொடுக்காத எதுவும் ராஜினாமாக் கடிதங்களாகக் கருதப்பட மாட்டாது; ராஜினாமாக் கடிதம் என்கிற பேச்சுக்கே இடமில்லை; ராஜினாமா என்கிற பேச்சுக்கும் இடமில்லை. பேரவைத் தலைவரிடத்தில் எப்போது அது கொடுக்கப்படுகிறதோ, அப்போதுதான் அது ராஜினாமா என்று வருமே தவிர, வேறு வகைகளில்—ஏதோ கடிதங்கள் இருக்கின்றன, இதை அவரிடத்தில் கொடுக்கிறார்கள். இதை இவரிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். இவர் போய்க் கொடுக்கிறார் என்பது எல்லாம் வேறு வகையான கடிதங்களாக இருக்கலாமே தவிர, ராஜினாமாக் கடிதங்களாக இருக்க முடியாது.

அதற்கு அடுத்து, திரும்பத் திரும்ப சில பத்திரிகைகளிலேயும், வானொலி, தொலைக்காட்சியிலேயும், ஏதோ இங்கே ஜனநாயக விரோதமாக காரியங்கள் நடக்கின்றன; ஆகவே இந்த முடிவை